ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2180/19 - 2020 ජුනි මස 16 වැනි අඟහරුවාදා - 2020.06.16

2180/19 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### நாணய விதிச் சட்டம்

திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்க அமுலாக்கங்களின் 422 ஆம் அத்தியாயம்) 10 (இ), 93, 94, 96 மற்றும் 97 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன்,**
ஆளுநர்,
இலங்கை மத்திய வங்கி.

2020, யூன் 16.

ஒழுங்குவிதி “ஈ”

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

நாணயச் சபையினால் ஆக்கப்பட்டு 2013, ஏப்பிறல் 12 ஆந் திகதியிடப்பட்ட 1805/39 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 2013, யூன் 26 ஆந் திகதியிடப்பட்ட 1816/13 ஆம் இலக்க, 2015, திசெம்பர் 31 ஆந் திகதியிடப்பட்ட 1947/39 ஆம் இலக்க,

1A - G 032365 - 37 (2020/06)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2018, செத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட 2089/28 ஆம், 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதியிடப்பட்ட 2091/2 ஆம் இலக்க, 2018, ஒற்றோபர் 12 ஆந் திகதியிடப்பட்ட 2092/62 ஆம் இலக்க 2018, நவெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட 2097/15 ஆம் இலக்க, 2019, பெப்புருவரி 22 ஆம் திகதியிடப்பட்ட 2111/50 ஆம் இலக்க மற்றும் 2020, மாச்சு 17 ஆந் திகதியிடப்பட்ட 2167/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்டவாறான ஒழுங்குவிதி "ஈ" 2020, யூன் 16 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.

ஒழுங்குவிதி 2 (i) (ஆ) இல், "4.00 சதவீதம்" என்ற எண்தொகையினையும் சொற்களையும் நீக்கி அதனிடத்து "2.0 சதவீதம்" என்ற எண்தொகையினையும் சொற்களையும் பதிலிடுவதன் மூலம்.

ஒழுங்குவிதி 5 இல், "நான்கு சதவீதம்" என்ற சொற்களை நீக்கி அதனிடத்து "3.00 சதவீதம்" என்ற எண்தொகை யினையும் சொற்களையும் பதிலிடுவதன் மூலம்.

அட்டவணை "அ" பின்வரும் அட்டவணை "அ" மூலம் பதிலீடு செய்யப்படுகிறது.

***அட்டவணை "அ"***

*அறிக்கைப் படிவம்*

நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை

**வங்கியின் பெயர் ……………………………………………………………………………………………………...**

**(…………………………….………)** தொடக்கம் **(……………………………….………)** வரையான காலத்திற்கானது.
(திகதி) (திகதி)

சேரல் : பணிப்பாளர்
உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியின் ஒவ்வொரு வேலை நாள் முடிவிலும் வங்கியின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|
| கேள்வி வைப்புக்கள் | தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள் / ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் | அனைத்து ஏனைய வைப்புப் பொறுப்புக்கள்[1] |
| | | | |

1 வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும்.

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

…………………………………………………ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1. (அ) விடயத்திற்கு ஏற்றவாறு<br>(i) 'மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக் கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கை அல்லது<br>(ii) 'மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்கள்<br>அத்துடன்<br>(ஆ) 2018 ஒற்றோபர் 11 ஆந் திகதியிடப்பட்ட 2018 இன் 2 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுக் கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் நியதிகள் மீதான இறக்குமதி<br>இற்கெதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லைகளின் 100 சதவீதம். | |
| 2. மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப் புக்களின் 2 சதவீதம். | |
| 3. 1 மற்றும் 2 இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புக்களின் மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 3 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தில் (1+2-3) மீது பேணப்படுவதற்கு வேண்டப்படும் மொத்த ஒதுக்குகள். | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவானவை என்றும் நான் / நாம் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன் / சான்றுப்படுத்து கின்றோம்.

திகதி : ………………………………………………

………………………………………………
உத்தியோகபூர்வ கையொப்பம்

**குறிப்பு -**

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.

07 - 147

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.